**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.224/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | சிவசங்கரி | Prosecution | LW-4 as PW-3 |
| Husband Name | திலகராஜ் | Defence | |
| Address | கூத்தானுர் | Taluk | |
| District | மயிலாடுதுறை | Age | 32/2025 |

Solemnly affirmed by Tmt.K.Keerthana Junior Assistant of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **06.11.2025**

**எதிரி ஆஜர்.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரியையும், அ.சா.1 ஐயும் எனக்கு தெரியும். ஒரே தெருவைச் சேர்ந்தவர்கள். கடந்த 11.07.2024 ஆம் தேதி இரவு 8.30 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரி அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் திட்டியும், கட்டையால் தாக்கியும், கொலைமிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.224/2024**

| Deposition of Name | சுபா | Prosecution | LW-2 as PW-2 |
|---|---|---|---|
| Husband Name | வேல்முருகன் | Defence | |
| Address | கூத்தானுர் | Taluk | |
| District | மயிலாடுதுறை | Age | 30/2025 |

Solemnly affirmed by Tmt.K.Keerthana Junior Assistant of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **06.11.2025**

**எதிரி ஆஜர்.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். கடந்த 11.07.2024 ஆம் தேதி இரவு 8.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரி வந்த சத்தம் போட்டார். அந்த சமயம் வீட்டில் யாரும் இல்லை. அதன் பின் எனது மாமியார் வீட்டிற்கு வந்தவுடன் நடந்ததை கூறினேன். நான் எனது மாமியாரிடம் கூறுவதை கேட்ட ஆஜர் எதிரி என்னடி பேசுரிங்க என்று கூறி வீட்டிற்குள் புகுந்து எனது மாமியாரை வெளியே இழுத்துவந்து ராடு கம்பியால் நெத்தியில் அடித்துவிட்டு, வீட்டிற்கு வெளியே இருந்த சிலாபில் மோதிவிட்டார். அதில் எனது மாமியாருக்கு நெத்தியில் அடிபட்டது. அருகில் இருந்தவர்கள் சண்டையை விளக்கிவிடவே 108 ஆம்புலன் மூலம் எனது மாமியாரை சிகிச்சைக்கு சீர்காழீ GH க்கு அழைத்துசென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்குவிசாரணை**

அ.சா.1 வளர்மதி எனது மாமியார் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் என்னை மருத்துவமனையில் வந்து விசாரணை செய்தார்கள் தேதி நியாபகம் இல்லை. எனது வீட்டில் வந்து தங்கியிருந்த இளங்கோவன் என்பவர் தெரிந்தவரா அல்லது உறவுக்காரரா என்றால் உறவுக்காரர். எதிரியின் தகப்பானார் பெயரில் உள்ள பட்டாவில் நாங்கள் குடியிருந்துவருவதாக சீர்காழீ மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எதிரி தகப்பனார் பெயரில் உள்ள பட்டாவில் நாங்கள் அரசு வீடு கட்ட முயற்சி செய்தோம் என்றால் சரியல்ல.

எதிரியின் 12 வயது மகள் குளிப்பதை இளங்கோவன் என்பவர் மறைந்து நின்று பார்த்தார் என்று அனைத்து மகளிர் காவல் நிலையம் சீர்காழியில் புகார் கொடுக்கப்பட்டு சமரசம் செய்து முடிக்கப்பட்டது என்றால் சரிதான். எதிரி தனது மகள் குளிப்பதை இளங்கோவன் என்பவர் மறைந்து நின்று பார்த்ததை ஊர்காரரிடம் தெரிவித்தார் என்றால் சரியல்ல. இதனை மறைப்பதற்காக தான் எனது மாமியார் அ.சா. 1 நடக்காத சம்பவத்தை கூறி 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு சென்றால் தான் வழக்கு பதிய முடியும் என்ற காரணத்திற்காக தான் மருத்துமனைக்கு சென்றால் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணை செய்த போது எதிரி திட்டிக்கொண்டிருந்ததாகவும், அதனை அ.சா.1 இடம் தெரிவித்ததாகவும் உடனே எதிரி எனது வீட்டிற்குள் புகுந்து எனது மாமியாரை வெளியில் இழுத்துவந்து ராடால் அடித்ததாகவும், சிமெண்ட் சிலாபில் மோதியதாகவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.அ.சா. 1 ஐ நெற்றியில் எதிரி அடித்ததாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொன்னேன். சம்பவ இடத்தில் யார் யார் இருந்தார்கள் என்று போலிசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை எதிரியின் தகப்பனார் பெயரில் உள்ள இடத்தினை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் அ.சா.1 எனது மாமியார் பொய்யான புகாரினை கொடுத்துள்ளார் நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றாலும் எதிரியை பழி வாங்குவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இரும்பு ராடால் தனது மாமியாரை அடித்தாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**